# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 28, 2024

Weekly E-paper ● September 28, 2024




## திருப்பதி லட்டு

### "பேஷ், பேஷ், ரொம்ப நன்னா இருக்கு!

இனியன்

**15 மாதங்கள் சட்டப் போராட்டம், உறுதி குலையா செந்தில்பாலாஜி!**

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

**இலங்கையின் புதிய அதிபர்**

தலையங்கம்

**பேரவைச் செய்திகள்**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● செப்டம்பர் 28, 2024 Weekly E-paper ● September 28, 2024


# திருப்பதி லட்டு

## "பேஷ், பேஷ், ரொம்ப நன்னா இருக்கு!



**இனியன்**

கடந்த ஒரு வாரமாய்த் திரும்பும் திசையெல்லாம் திருப்பதி லட்டு பற்றித்தான் பேச்சு!

'பெருமாள் பிரசாதமே இல்லியோ....'

என்று லட்டு பற்றிப் பெருமையாகப் பேசியவர்கள், அதில் மாடு, பன்றிக் கொழுப்பு கலந்திருக்கிறது என்று உறுதியான பிறகு, இப்போது அது பிரசாதமே இல்லை என்று கூறுகிறார்கள். அது வெறும் இனிப்புதான் என்கின்றனர். லட்டு வெறும் இனிப்புதான் என்றால், தீர்த்தம் வெறும் தண்ணீர் தானே! இதைத்தானே நாம் காலகாலமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

ஒரு பக்கம் லட்டு பிரசாதம் இல்லை என்று சொல்லுகிறவர்கள், மறுபக்கம் தலைமை அர்ச்சகர் ராமகிருஷ்ணர் தலைமையில், காலை முதல் மாலை வரை மகா நிவாரண தோஷ சாந்தி யாகம் நடத்துகிறார்கள். அது கடவுளுக்கு படைக்கப்பட்ட பிரசாதம் இல்லை என்றால், பிறகு எதற்கு நிவாரண தோஷ சாந்தி?

எல்லாவற்றுக்கும் நிவாரணமும், பரிகாரமும் இருக்கிறது என்றால், தினமும் மாட்டிறைச்சி தின்றுவிட்டு பிறகு நிவாரண தோஷ சாந்தி செய்து விடலாமே!

இந்த லட்டு விவகாரத்திற்குள் எந்தத் தொடர்பும் இல்லாத ஜக்கி வாசுதேவ் உள்ளே நுழைந்து, தன் புதிய கண்டுபிடிப்பு ஒன்றைச் சொல்கிறார். அறநிலையத் துறை அரசிடம் இருப்பதால்தான் இப்படி எல்லாம் நடக்கிறதாம். அதனை ஹிந்துக்கள் கையில் கொடுத்து விட வேண்டும் என்கிறார்.


குலதெய்வம் கோமாதாவின் கொழுப்பை லட்டில் கலந்து விட்டார்கள் என்று கொந்தளிக்கும் சந்திரபாபு நாயுடு, இனிமேல் புனிதம் கெடாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்கிறார். அது இருக்கட்டும், புனிதம் கெட்டுப் போன லட்டு லாரி லாரியாய் விற்பனையாகி இருக்கிறதே...., அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவின் போது ஒரு லட்சம் பேர் சுவைத்து சுவைத்து அதனைச் சாப்பிட்டு இருக்கிறார்களே, அதற்கெல்லாம் என்ன செய்வது?

திருப்பதி லட்டுகளை உடைத்துப் பார்த்தால் அதற்குள் இருந்து நிறைய அரசியல் வெளிவரும்போலத் தெரிகிறது. மாடு, பன்றி கொழுப்பும், மீன் எண்ணையும், லட்டுகளில் கலக்கப்படுவது நாயுடு உள்பட எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்திருப்பதற்குத்தான் வாய்ப்புகள் உள்ளன. இப்போது சட்டென்று அது பெரிதாக்கப்படுவதைப் பார்த்தால், அது ஜெகன்மோகன் ரெட்டிக்கு எதிரான ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மை பளிச்சென்று புரியும்!

ஜெகன்மோகன் ஒரு கிறிஸ்தவ ரெட்டியார் என்பதால், அதையும் வெளிக் கொண்டு வந்து, மத மோதலாகவும் இதை மாற்றிவிடலாம் என்னும் திட்டமும் உள் இருக்கக்கூடும்! இந்து மதத்தின் புனிதத்தைக் கிறிஸ்தவர்கள் கெடுத்து விட்டார்கள் என்று சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது!

உணவுக்குள் மதத்தைக் கொண்டு வந்து, மதத்திற்குள் அரசியலைத் திணித்து, அரசியலை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள எத்தனை எத்தனை வியாக்கியானங்கள்!

## எஸ்றா சற்குணம் மறைவு



பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் மறைவிற்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்

# 15மாதங்கள் சட்டப் போராட்டம், உறுதி குலையா செந்தில்பாலாஜி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

தலைவர் கலைஞர் எழுதிய பராசக்தி திரைப்படத்தில் "இந்த நீதிமன்றம் பல்வேறு விசித்திரமான வழக்குகளைச் சந்தித்துள்ளது" என்று ஒரு வசனம் இடம் பெற்றிருக்கும். அப்படி ஒரு விசித்திரமான வழக்குதான் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கு. பொதுவாக "Bail is a Rule and Jail is an Exception" என்பது தான் இந்திய குற்றவியல் சட்டத்தின் நிலைப்பாடு. ஆனால் பதினைந்து மாதங்கள் செந்தில் பாலாஜி சிறையில் வாடிய போதும் பிணை கோரிய அவரது மனுக்கள் பல்வேறு நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் தற்போது மாண்புமிகு உச்சநீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியுள்ளது. நீண்ட காலமாக அவர் சிறையில் இருக்கிறார் என்பதாலும், இந்த வழக்கு முழுவதுமாக முடிவடையப் பல ஆண்டுகள் ஆகலாம் என்பதாலும் அவரைப் பிணையில் விடுவிக்க மாண்புமிகு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதப் பணபரிமாற்றத் தடைச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றங்களுக்காக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஒரு வேளை அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு குறைந்தபட்சமாக மூன்று ஆண்டுகளும், அதிகபட்சமாக ஏழு ஆண்டுகளும் தண்டனை விதிக்கப்படலாம். ஆனால் அவர் இப்போதே குறைந்தபட்ச தண்டனைக் காலத்தின் ஏறத்தாழ பாதி காலத்தை விசாரணைக் கைதியாகவே சிறையில் கழித்துள்ளார் என்பது மிகவும் கொடுமையானது. வழக்கின் முடிவில் அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டால் விசாரணைக் கைதியாக அவர் கழித்த பதினைந்து மாத சிறைவாசத்திற்கு என்ன நிவாரணைத்தை நீதிமன்றங்களால் வழங்க இயலும்.

இந்த வழக்கின் ஆரம்பக் கட்டத்தில் இருந்தே அமலாக்கத்துறை இதை விசாரிக்க முடியாது என்ற வாதத்தை செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர்கள் தொடர்ந்து முன்வைத்தனர். இயல்பாகவே ஒரு வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு சட்டவிரோதமாக பணப்பரிமாற்றம் நடந்துள்ளது என்பது உறுதி செய்யப்பட்டால் மட்டுமே



அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரிக்க முடியும். செந்தில்பாலாஜி மீதான குற்றச்சாட்டில் மூல வழக்கில் விசாரணையே இன்னும் தொடங்காத நிலையில் அமலாக்கத்துறை அவரைக் கைது செய்து 471 நாட்கள் சிறையில் அடைத்து வைத்திருந்தது அரசியல் பழி வாங்கும் நடவடிக்கைதான் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு பிணை வழங்கும் போது முதல்வர் அலுவலகம் செல்லக் கூடாது என்று விதிக்கப்பட்டது போன்ற கடுமையான நிபந்தனைகள் செந்தில் பாலாஜிக்கு விதிக்கப்பட வில்லை. எனவே அவர் மீண்டும் அமைச்சராக பொறுப்பேற்பதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் பழிவாங்கும் நடவடிக்கையை துணிவோடு எதிர்கொண்டு ஏற்றுக் கொண்ட இயக்கத்திற்கும் அதன் தலைவருக்கும் விசுவாசமாக இருந்து, சட்டத்தின் துணையோடு சிறையில் இருந்து வெளிவரும் செந்தில் பாலாஜி அவர்களின் மன உறுதி பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

பத்தாண்டுகளுக்கு முன்பே முடிந்து போன வழக்கை அரசியல் காரணங்களுக்காக முன்னெடுத்திருப்பதால் அமலாக்கத்துறையால் அவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க இயலாது. ஆகவே மூல வழக்கில் இருந்து செந்தில் பாலாஜி குற்றமற்றவராக வெளியே வருவார் என்பதை இவ்வழக்கின் போக்கிலிருந்து அறிய முடிகிறது.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இலங்கையின் புதிய அதிபர்

இலங்கையில் 'ஜனதா விமுக்தி பெரமுன' என்ற இயக்கத்தை 14-05-1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போது அதன் தலைவர் ரோகண விஜயவீர, பொதுச் செயலாளர் லயன்ஸ் போபகே.

இந்த இயக்கம் மார்ச்சிய - லெனினிய இடதுசாரி வழியில் இலங்கையில் ஒரு சோசலிச அரசை நிறுவ முயன்றது. 1971 மற்றும் 1987-89 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு எதிராக இளைஞர்களைத் திரட்டி ஆயுதம் ஏந்திப் போராடி இலங்கையை அதிரவைத்தது. ஆனாலும் அந்தக் கிளர்ச்சிகள் தோல்வியடைந்தன.

ஆயுதம் ஏந்தியப் போராட்டம், அதன் நடைமுறைகளை மக்கள் ஏற்கவில்லை. அதனால் ஆயுதங்களைக் கைவிட்டுத் தேர்தல் அரசியலுக்கு இந்த இயக்கம் வந்தது. 1987 இல் மாணவராக ஜேவிபியில் இணைந்த அனுரா குமார திசநாயகா உழைப்பால் முன்னேறி 2004ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்றார். 2014ஆம் ஆண்டு ஜேவிபி கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அவர் இன்று இலங்கையின் அதிபர். இலங்கை மக்களின் நலன் பேணுவதுடன், இப்போது சிதறடிக்கப்பட்டு இன்னல்களுக்கு உள்ளாகி இருக்கும் ஈழத் தமிழர்களின் வாழ்வியலைக் கருதுவதும் அவரின் கடமை.



தவிர அண்மையில் இருக்கும் தமிழ்நாட்டின் மீனவர்களை ஒவ்வொரு நாளும் இலங்கைக் கடலோரப் படையினர் தாக்குவதும், பிடித்த மீன்களை அழிப்பதும், கைது செய்வதும், இலங்கை நீதிமன்றம் அவர்களுக்குக் கோடிக்கணக்கில் தண்டனை விதித்துச் சிறையில் அடைத்துப் படகுகளைப் பறிமுதல் செய்வதும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

மார்க்சிய இடதுசாரி கொள்கையாளர்,அதிபர் அனுரா குமார திசநாயகா, (தமிழ்நாட்டு) மீனவத் தொழிலாளர்கள் சுதந்திரமாகக் கடலில் மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தமிழக மக்களின் வேண்டுகோள், செய்வார் என நம்புவோம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408






# ஐந்தாம் ஆண்டில் திராவிடப்பள்ளி

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ‘திராவிடப் பள்ளி’ 5 ஆம் ஆண்டுத் தொடக்கவிழா 21-09-2024 அன்று திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கினார். திராவிடப் பள்ளியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி மா. உமாபதி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இணை ஒருங்கிணைப்பாளர் கார்த்தி நிகழ்ச்சிக்குத் தொகுப்புரை ஆற்றினார். திராவிடப் பள்ளியின் நிறுவனர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கவுரையை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து நான்காம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்கள் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துரையாற்றினார். அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன், விஜயபாலன் ஆகியோரும் வாழ்த்திப் பேசினார்கள். இணை ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார். தோழர்கள் சிற்பி செல்வராசு, சிங்கராயர், பெல் ராஜன், செல்வின், சேக்தாவுத், மகாலட்சுமி, வெற்றிச் செல்வன், எட்வின் உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் ‘நவீன சம்பூகன்’ நாடகம் திராவிடப்பள்ளி மாணவர்களால் நடத்தப்பட்டது.













Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian